# திருக்குறளில் வரையறுக்கப்பட்ட இல்லறவியல் கட்டுப்பாடுகள்

**முனைவர்.த.பத்மா**
**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை**
**புனிதசிலுவை தன்னாட்சிக் கல்லூரி**
**திருச்சிராப்பள்ளி – 02.**
**மின்னஞ்சல்: padmakvb@gmail.com**

6

**ஆய்வுச்சுருக்கம்**

அறம் என பெரும் பொதுமை நல உணர்வு ஒருவர் உள்ளத்து தோன்றின் அதை செயல்படுத்த விரும்பும் ஒவ்வொருவரும் அதற்கு என சில வாழ்வியல் அடிப்படைகளை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பது ஆசிரியர் கருத்தாகும் இல்லம் மனை வீடு அகம் ஆகியவை ஒரு பொருள் குறித்த பல சொற்கள் மக்களின் பண்பு நாகரிக படிநிலை வளர்ச்சியின் படி பல்வேறு சிறப்பு நிலைகளை உணர்த்துவதற்கு தனித் தனி சொற்களாக இவை நின்றன இல்லம் புலங்கிடமாக கொண்ட ஓர் அடைவின் உள்பகுதியை குறித்தது இல் உள்ளே இல்லம் மனை நிலையான பிழைக்கிடத்தின் அடைவை குறித்தது மண்ணுதல் நிலைத்தல் மண்மனை வீடு வாழ்க்கை முயற்சிக்காக சென்ற வெளி உலக தொடர்பின்றி விடுபட்டு வந்து தன் உறவோடு தங்கி ஓய்வு கொள்ளும் இடம் விடுதல் விடு வீடு இல்லறம் கூறும் அறிவியல் போன்றவையாகும்.

**திறவுச்சொற்கள்**

மாண்புடையள்- சிறப்புடையவள்

மனைமாட்சி –நற்குணம் நிறைந்தவர்

வளத்தக்காள் – வாழ்க்கைத் துணை

நன்கலம – நல்ல மக்களைப்பெறுதல்

**முன்னுரை**

இல் அறம் இல்வாழ்வின் கண் நின்று மனதால் தூய்மை பட அறம் செய்து ஒழுகி வாழ்தல் அவ்வாறு வாழும் இடத்து தன்மை சார்ந்தோருக்கு சாராதவருக்கும் யாவருக்கும் உதவி செய்து வாழ வேண்டும் இல்வாழ்க்கை

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது (குறள் 13 )**

திருமண வாழ்க்கை ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு அன்பாகவும் ஒற்றுமையாகவும்

உண்மையாகவும் அமைந்துவிட்டால் அதுவே சிறந்த பயனுள்ள பண்புகளை உடைய வாழ்க்கையாக இருக்கும் வள்ளுவர் காட்டும் இல்லறங்கள் தனிமனித வாழ்வில் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டிய ஒன்று இல்லறம் இல்லறத்தின் வழியாக தான் இன்பம் துய்க்க முடியும். பொருளின்பமானாலும் சரி வீடு பேரின்பமானாலும் சரி இல்லறமே வாழ்வின் முதல் படி ஆகும்.

**அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**

**புரத்த புகழும் இல (குறள் 39)**

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவருக்கும் நல்லாட்சியின் நின்ற துணை மனைவியோடு வாழ்பவன் தான் பிள்ளைகள் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் எனும் மூவருக்கும் நல்ல வாழ்வியல் உதவுபவன் என்பது பொருள் அதாவது மனைவியோடு வாழ்பவன் ஒரு நல்ல கணவனாகவும் தன் பிள்ளைக்கு சிறந்த தந்தையாகவும் தன் பெற்றோர்களுக்கு சிறந்த மகனாகவும் வாழ முடியும் என்கிற கருத்து பாராட்டத்தக்கது அதாவது இல்லறத்தில் ஈடுபடுபவனை மன அமைதி பெறுவான் என்றும் நல்ல சிந்தனைகள் அவனுக்குள் எழும் என்றும் கூட நாம் பொருள் கொள்ளலாம் தென்குளத்தார் தெய்வம் விருந்தோக்கள் தான் ஒன்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை சிறந்த இல்வாழ்வு கூறியதாக வள்ளுவர் கருதுவது வாழ்ந்து மறைந்தோரை நினைவு கூறுதல் தெய்வம் விருந்தோம்பல் சுற்றம் பேனல் ஆகிய கடமைகளை நிறைவேற்ற தன்னை நிலைப்படுத்திக் கொள்ளல் எனப்படும் ஐவகை அறநெறிகளும் இல்வாழ்வு நல் வாழ்விற்குரிய எனவாகும் விருந்தினரையும் சுற்றத்தாரையும் பேண தன்னை வாழ்க்கையில் நன்றாக நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் கூறுவது குறிப்பிடத்தக்கது .

**இல்வாழ்க்கையின் மேன்மை**

இல்லற வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வள்ளுவர் குரலில் வலியுறுத்தி கூறுகிறார் குறளில் அவர் கூறியுள்ள கருத்துக்களை பார்ப்பதற்கு முன் இல்வாழ்க்கையின் மேன்மையை உணர்த்தும் ஒரு புராண கதையை நினைவிற்கு வருகிறது அகத்திய முனிவர் இறுதியில் தன் ஆயுள் முடிந்து சொர்க்கத்திற்கு சென்றாராம் ஆனால் அவரை அங்கே உள்ளே அனுமதிக்க வில்லையாம். எனவே கோபமடைந்த முனிவர் காரணம் கேட்டாராம் அதற்கு அங்கிருந்த வாயில் காப்பான் நீங்கள் இல்லறத்தில் ஈடுபடவில்லை எனவே இங்கே அனுமதி இல்லை இல்லறத்தில் ஈடுபட்டவர்களுக்கு மட்டுமே சொர்க்கத்தில் இடம் என்று கூறினான் என்று அந்த புராண கதை கூறும் ஆக புராண காலத்திலிருந்து இல்லறம் என்பது நல்லறம் என்பதை விளக்குவதற்கான இந்த நிகழ்வு கூறப்பட்டிருக்கலாம் தெய்வப் புலவர் வள்ளுவர் இல்வாழ்க்கை எண்ணும் அதிகாரத்தில்

ஒவ்வொரு குரலிலும் இல்வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கூறும் கருத்து பொருந்துவதை எண்ணி நாம் பெருமை கொள்ளலாம்.

**சிக்கனமே சிறந்த வாழ்வு**

விவேக சிந்தாமணி சரித்திரம் அறியா பெண் திட்டமிட்டு வாழ இயலாது ஆதலால் மனையால் கணவன் வரவு குடும்பத்தார் வரவு அனைத்தையும் கணக்கிட்டு திட்டமிட்டு வரவுக்குள் செலவு செய்து எதிர்கால தேவைக்கும் சேமிப்பு செய்பவளாக இருக்க வேண்டும் இல்வாழ்க்கை தரத்தின் அச்சாணி போன்றவள் மனைவி தன் கணவனுக்கும் தன் வாழ்க்கைக்கும் குடும்பத்திற்கும் சமுதாயத்திலே நட்புகளினை ஈட்டி தருபவர்களாக சிறந்த இல்லற தர்மத்திற்குரிய கல்யாண குணங்கள் உடையவளாக இருத்தலை சிறப்பு என்று வள்ளுவ பெருந்தகை கூறியுள்ளார்

**மனைத்தக்க மாண்புடையள் கொண்டான்**

**வளத்தக்காள் வாழ்க்கை துணை (குறள் 51)**

அப்படி இல்லாத எத்தனை சிறப்பு உடையாளாக மனைவி இருந்தாலும் அதனால் யாதொரு பயனும் இல்லை என்று கூறுகிறார்

**மங்களமும் மக்கட்- பேணும் மங்கலம்**

**என்ப மனைமாட்சி மற்றதன் (குறள் 60)**

**நன்கலம் நன்மக்கட் பேறு**

கற்பொழுக்கத்தாலும் நற்குணத்தாலும் சிறந்து விளங்கி குடும்பத்தை காக்கின்ற மனைவியை என் வாழ்வின் ஆதாரம் என்றால் அது மிகையல்ல அப்படி வாழ்கின்ற மங்கள குணம் கொண்ட பெண்ணாலே தான் இல்வாழ்வில் கணவன் மனைவி சேர்ந்து இன்பமாக வாழ்ந்த வாழ்வுக்கு ஆதாரமாக அடையாளமாக அறிவு சான்ற நன் மக்களை பெற்றுத் தந்து நிறைந்த வாழ்வாக்குகின்றாள் மனையாலான பெண் தமிழினத்தின் மனைவிக்கு பெண்டாட்டி என்ற வழக்குச் சொல் உள்ளது பின்பு ஆக்கி உறவுகளை பெருக்குபவள் பெண்டாக்கி என்பது மருவி பெண்டாட்டி ஆனது மனைவி என்பது சந்நதியை பெருக்குவது என்று மனைமாட்சியில் கூறியுள்ளார்

**பெண்ணின் சிறப்பு:**

பெண் என்றாலே சிறப்பு என்கின்றனர் நம் முன்னோர்கள் பெண் என்பவள் மகளாய், சகோதரியாய், தோழியாய், மனைவியாய் ஒவ்வொரு ஆணின் வாழ்க்கையிலும் ஒரு துணையாகவும் வாழ்க்கையை முன்னெடுத்துச் செய்பவளாகவும் காணப்படுகின்றாள்.

இத்தகைய பெண் எவ்வாறு வாழ வேண்டும் என்று திருவள்ளுவர் புலப்படுத்துகிறார் இதனை,

**"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்து சோர்விலாள் பெண்"**

**குழந்தைச்செல்வம்:**

உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் செல்வம் எது என்றால் குழந்தைச் செல்வம் தான். ஒரு ஆண், பெண் வாழ்க்கையில் பிறவி கடனாக கருதுவது இந்த குழந்தைச் செல்வத்தைப் பெறுவது தான். இத்தகைய குழந்தைச் செல்வத்தைப் பற்றி திருவள்ளூர் கூறியிருக்கின்றார். அத்தகைய குழந்தைகள் நல்லவை தீயவை என்று அறிந்து நல்லவைகளை கற்றுக்கொள்ளும் குழந்தைகளை பெறுதல் சிறப்பாகும்,

**"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற"**

என்ற குறள் வழியாக அறியமுடிகின்றது.

**அன்பற்ற வாழ்க்கை:**

மனித வாழ்க்கையில் அன்பு ஒன்றே நிலையானது. யாருடைய வாழ்க்கையில் அன்பு இல்லையோ அவருடைய வாழ்க்கை பாலை நிலம் போன்றது. பாலைநிலத்தில் மரம் வளர்த்தால் அதில் எந்த பயனும் கிடைக்காது, அதே போல் உள்ளத்தில் அன்பு இல்லாதவர்கள் வாழ்க்கை பாலை நிலத்தில் இருக்கும் காய்ந்த மரம் போன்று காட்சி அளிக்கும் என்பதை திருவள்ளுவர் திருக்குறள் வாயிலாக சுட்டிக் காட்டுகின்றார் இதனை,

**"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று"**

என்ற குறள் புலப்படுத்துகின்றது.

**விருந்தினர் உபசரிப்பு:**

மனித வாழ்வில் தன் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று அவர்களுக்கு வயிறு நிறைய விருந்து படைத்து முகமலர்ச்சியுடன் அனுப்ப வேண்டும். சிலர் அனிச்சம் பூ முகர்ந்த உடன் எப்படி வாடிப் போகும், அதே போல் சில வீட்டுக்கு வரும் முன் விருந்தினருடன் முகத்தில் புன்னகை இல்லாமல் வரவேற்றாள் அனிச்சம் பூ

எவ்வாறு முகங்களுடன் வாடிவிடும் அதுபோல் வீட்டுக்கு வந்த விருந்தினர் வாடி விடுவார்கள். இதனை வள்ளுவர்,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"**

என்ற குறள் வழியாக அறியமுடிகின்றது.

**தொகுப்புரை**

பூமியில் வாழும் உயிர்களில் மனிதன் என்பவன் சூழ்நிலை கருதி சில தவறுகளைச் செய்கிறான். இவ்வாறு செய்யும் தவறுகளில் மிகக் கொடுமையானது பிறர் மனைவியை தவறான எண்ணத்துடன் பார்ப்பதாகும். அவ்வாறு பார்ப்பவர்கள் உடைய வாழ்க்கையில் பகை பாவம் அச்சம் பழி என இவை நான்கும் பார்வையிட்டு நீங்காது என்று திருக்குறள் வழியாக வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார். இதனை,

**"பகைபாவம் அச்சம் பழியென நான்கும்**
**இகவாவாம் இல்லிறப்பான் கண்"**

என்று குறள் வழியாக எடுத்துரைக்கிறார்.

**பார்வை நூல்கள்**


1.சாரங்கபாணி இரா, திருக்குறள் உரைவேற்றுமை, அண்ணாமலைப்பல்கலைக்கழகம் அண்ணாமலைநகர்

2.கி.ஆ.பெ விசுவநாதம், திருக்குறள் பாரிநிலையம்184,பிராட்வே சென்னை-600108

3.பரிமேலழகர் திருக்குறள் எம்.ஆர் புக்நிலையம் சென்னை-600001

4.ராதா முரளி திருக்குறள் மூலமும் உரையும் சென்னை-600001